**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.46/2024

Deposition of witness for DW2

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | பிச்சையா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026.

முதல் விசாரணை:

நான் கடையம் பெரும்பத்து-2ல் கிராமநிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். தென்காசி வட்டாட்சியருக்கு சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் அவருக்கு சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் எனக்கு வழங்கிய அதிகார கடிதம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அயன் புஞ்சை சர்வே எண்.689 க்கான "அ" பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். மேற்படி "அ" பதிவேடு Computerized copy சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. யூ.டி.ஆர்.க்கு முந்தைய மேற்படி புல எண்ணுக்கான "அ" பதிவேடு சா.சா.ஆ.3 Certified copy ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(சாட்சி யூ.டி.ஆர்.க்கு முந்தையான ஆவணம் என கூறியதால், இந்நீதிமன்றம் அதை பரிசீலனை செய்ததில் சா.சா.ஆ.3 ஆவணம் யூ.டி.ஆர்.க்கு பிந்தைய ஆவணம் என தெரியவந்தது. மேலும் நீதிமன்றம் சாட்சியிடம் யூ.டி.ஆர்.க்கு முன்புள்ள ஆவணங்கள் யார் வசம் இருக்கும் என்று கேட்டதற்கு கோட்டாட்சியர் வசம் இருக்கும் என்று கூறினார்)**

சா.சா.ஆ.3 ஆவணத்தில் புல எண்.689/1ஏ, 689/1பி, 689/1சி ஆகிய புல எண்ணுக்கான பட்டா நாராயண நாடார்மகன் முத்தையா நாடார் பெயரில் உள்ளது, பட்டா எண்.340ஆகும். பட்டா எண்.340 என்பது புதுப்பட்டாவாகும். யூ.டி.ஆர்.க்கு முந்தைய பட்டா 894 ஆகும். யூ.டி.ஆர்.க்கு பின்பு யார் யார் பெயருக்கு பட்டா மாறப்பட்டது என்றால் பட்டா எண்.340லிருந்து 1800 சூசை ரத்தினம் மகன் ராமராஜ் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. 1880லிருந்து 1922க்கு பட்டா மற்றம் செய்யப்பட்டுள்ளது. வைத்திலிங்கம் மகன் பொன்னுச்சாமி, ராமராஜ் மனைவி மஞ்சுளா ஆகியோர் பெயருக்கு புல எண்.689/1ஏ–லிருந்து புல எண்.689/1சி வரை பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்டா எண்.2026ல் 689/1ஏ முதல் புல எண்.689/1சி, சுடலைக்கனி மகன் செந்தில்கணேஷ், பாலசுப்பிரமணியன் மனைவி அஷ்வினி பெயருக்கு மாற்றம் ஏற்பட்டது, இதுவே கடைசியாக மாற்றம் ஏற்பட்டது. பொதுவாக யார் பெயரில் மாற்றம் ஏற்பட்டதோ அவர்கள் அனுபவம் செய்வார்கள் என்றால் சரிதான். அனுபவம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தால் புகார் கொடுப்பார்கள் என்றால் புகார் எதுவும் வரவில்லை. வாதியான பிச்சுமணி மகன் ஆறுமுகப்பாண்டி என்பவர் பட்டா மாற்றம் சம்பந்தமாக மனு எதுவும் அளிக்கவில்லை. மேற்படி புல எண் சம்பந்தமாக யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை. பட்டா எங்கள் அலுவலகத்தால் மாற்றம் செய்யப்படவில்லை, ஆவணம் பதிவு செய்தபின்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து இணையதளத்தின் மூலமாக தானாகவே பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

நான் தாக்கல் செய்த சான்றாவணம் கணினி வழியாக பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா சம்பந்தமாக விசாரணை எதுவும்

நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா சம்பந்தமாக முன்பாத்தியஸ்தர்களுக்கும், அருகாமையில் உள்ள நபர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். உரிமையியல் ஆவணங்களுக்கு விரோதமாக பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். பொதுவாக பட்டா பாஸ்புக் விதிமுறையின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் உண்மை தன்மை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பதிவு ஆவணங்களுக்கு விரோதமாக பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உரிமை ஆவணங்களுக்கு விரோதமானது என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் நடவடிக்கை சம்பந்தமாக புகார் வந்தால் அதற்காக ஆர்.டி.ஆர். கோப்பு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். ஆர்.டி.ஆர். கோப்பு நிரந்தர கோப்பு கிடையாது என்றால் சரிதான். ஆர்டிஆர் யை பார்த்தால் பட்டா மாறுதல் சம்பந்தமாக புகார் வந்தது தெரியும் என்றால் சரிதான். ஆர்டிஆர் யை பார்த்தால் பட்டா மாறுதல் சம்பந்தமாக ஆட்சேபனை நடந்ததா அல்லது மனு கொடுத்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி